எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.நா.சுப்பிரமணியன்

நக.எண். 274/2023/அ2 நாள்.23.02.2024

பொருள் : மனைப்பிரிவு ஒப்புதல் – தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி – எட்டையபுரம் கிராமம் சர்வே எண் 714/1A2 ல் 20000 ச.மீ (4.94 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைகளுக்கு ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1) தூத்துக்குடி மாவட்ட நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். FAL8Q63E/ THOOTHUKUDI/ 2023 /TCP நாள்.24.10.2023

2) எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற முன் அனுமதி நாள்.22.02.2024

3) தொடர்புடைய ஆவணங்கள்.

****

பார்வை (1) ல் காணும் தூத்துக்குடி மாவட்ட நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி , எட்டையபுரம் பேரூராட்சி எட்டையபுரம் கிராமம் சர்வே எண். 714/1A2 ல் 20000 ச.மீ (4.94 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **SWP/DTCP/THOOTHUKUDI/LAYOUT No.94/2023** ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 97 வரை உள்ள மனைகளுக்கான சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சியின் பயன்பாட்டிற்கென எட்டையபுரம் சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.3562/2023 நாள்.19.10.2023 ன்படி எட்டையபுரம் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மனைப்பிரிவில் அமைந்துள்ள 97 மனைகளுக்கு கூராய்வு கட்டணம் மற்றும் நாளது தேதியில் மனைபிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டு தொகையில் 3 சதவீதம் கட்டணம் உட்பட தொகை ரூ.1,23,430/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து நானூற்றி முப்பது மட்டும்) அடையார் கிளை இந்தியன் வங்கியில் ECS மூலம் நாள்.21.02.2024 ன்படி எட்டையபுரம் பேரூராட்சி வங்கி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை (2) ல் காணும் விபரப்படி எட்டையபுரம் பேரூராட்சி மன்ற முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி எட்டையபுரம் கிராமம் சர்வே எண் 714/1A2 ல் 20000 ச.மீ (4.94 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள 1 முதல் 97 வரையிலான 97 குடியிருப்பு மனைகளை பத்திரப்பதிவு செய்து கொள்ள தடையின்மை சான்று வழங்கப்படுவதுடன் கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 97 குடியிருப்பு மனைகளுக்கு இதன் மூலம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) தாங்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது. இதில் ஏதேனும் தவறுகள் / முறைகேடுகள் என பின்னர் தெரியவந்தால் இவ்வுத்தரவு முன்தேதியிட்டு இரத்து செய்யப்படும்.
2) இந்த மனைப்பிரிவில் கட்டிடம் கட்டப்படும் நேர்வில் உரிய கட்டிட உரிமம்/அனுமதி உரிய கட்டணங்கள் செலுத்தி பேரூராட்சியில் தனியே பெறப்படவேண்டும். மேலும் காலியிடவரி உரிய தேதியில் செலுத்தப்படவேண்டும்.

Scanned with OKEN Scanner

82

3) மனைப்பிரிவு/மனையிடம் முறைப்படுத்தியது சம்பந்தமாக நீதிமன்றத்தின் மூலம் தாவா வரப்பெற்றால் இந்த அலுவலகம் மூலம் கொடுக்கப்பட்ட அனைத்து உத்திரவுகளும் மற்றும் ஆணைகளும் ரத்து செய்யப்படும்.
4) இந்த உத்திரவு மற்றும் செலுத்தப்பட்ட கட்டணங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு உட்பட்டதாகும்.உள்ளாட்சி நிதித்தணிக்கையில் இழப்பு தொகை எதுவும் குறிப்பிடப்பட்டால் மனுதாரரே செலுத்த வேண்டும்.
5) விண்ணப்பதாரர் உண்மைக்கு புறம்பாக ஆவணங்களை இணைத்து முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்தியிருந்தால் இவ்வுத்திரவு பொருந்தாது.
6) இவ்வுத்திரவு குறித்து ஏதேனும் புகார் வரப்பெற்று தக்க ஆதாரங்களுடன் நிரூபணமானால் இந்த உத்திரவு மற்றும் செலுத்தப்பட்ட தொகை ரத்தாகும்.
7) அரசு ஆணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.04.05.2017-ல் கண்டுள்ள நெறிமுறைக்கு உட்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் தவறுகள் / முறைகேடுகள் இருப்பின் உத்திரவு முன் தேதியிட்டு இரத்து செய்யப்படும்.
8) தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். FAL8Q63E/ THOOTHUKUDI/ 2023 /TCP நாள்.24.10.2023 ன் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
9) நீரோடைகள்/நீர்நிலைகள், ஆக்கிரமிப்பு, உயர்மின் அழுத்த மின் பாதைகளின் கீழ் மனைகள் அமைக்கப்பட்ட மனைக்கு இவ்வுத்திரவு பொருந்தாது.
10) பொது இடம், சாலைகள் ஆக்கிரமிப்பு இருப்பின் அவ்விடத்திற்கு இவ்வுத்தரவு பொருந்தாது.
11) மேலும் ஒப்படைப்பு செய்யப்பட்ட தார்சாலைகளில் ஒப்படைப்பு செய்யப்பட்டதில் இருந்து 5 ஆண்டுகளுக்கு தங்கள் சொந்த செலவில் பராமரிப்பு செய்து கொள்ள வேண்டும்.
12) இதர அடிப்படை வசதி பணிகள் மனைப்பிரிவில் விதிமுறைகளின் படி போதுமான குடியிருப்புகள் அமையப்பெற்ற பின்னரே பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும்.
13) மேற்படி மனை பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சோலார் மினிவிளக்குகள் தங்கள் சொந்த செலவில் பராமரிப்பு செய்து கொள்ள வேண்டும்.
14) மேற்படி மனைகள் எட்டையபுரம் பேரூராட்சி 10 வது வார்டு துர்க்கையம்மன் கோவில் தெருவில் இணைந்துள்ளது.

செயல் அலுவலர்
எட்டையாபுரம் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

23/2/24

பெறுநர்

திருமதி.K.யாழினி,
4/485, சுபா நகர்,
அப்பனேரி, கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி – 628502

நகல்

1) துணை இயக்குநர் (பொ) அவர்கள், நகர் ஊரமைப்பு துறை, தூத்துக்குடி மாவட்டம்.
2) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், எட்டையபுரம்.
3) கோப்புக்கு

Scanned with OKEN Scanner